THE HINDU

14 AUG 2023

PAGE 2



## INBRIEF




### PU extends deadline for postgraduate applications

Pondicherry University has extended till August 18 the last date for submission of online applications for admission to various postgraduate degree and diploma programmes based on the CUET(PG) - 2023 results. A press note from the university said the extension was aimed at benefiting candidates who could not complete their registration earlier, as well as fresh candidates. The online link to apply is available at https://www.pondiuni.edu.in-/admissions-2023-24/. Aspirants may also refer to the information brochure available on the university's website for the eligibility criteria and the respective test papers. Candidates are advised to regularly check the university's website for updates.

DINAMALAR

14 AUG 2023

PAGE 3

# திறன்மிக்க மாணவர்களை உருவாக்க துணைவேந்தர் குர்மீத் சிங் அறிவுரை

புதுச்சேரி, ஆக. 14–

தேசிய கல்வி கொள்கையின்படி மாணவர்களை திறன்மிக்கவர்களாக மாற்றும் இலக்கை நோக்கி கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள் பயணிக்க வேண்டும் என துணைவேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இணைப்பு கல்லூரிகளில் தேசிய கல்வி கொள்கையின் பாடத்திட்டம் அமல்படுத்துவது தொடர்பாக கல்லூரி முதல்வர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டு உயர் பயிற்சி நிறுவனத்தில் நடந்த முகாமில் நிறுவன இயக்குனர் பாஞ்ராமலிங்கம் நோக்கவுரையாற்றினார்.

முகாமை துவக்கி வைத்து, பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் பேசியதாவது:

சாதாரணமாக கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு தேர்வு நடத்தி, டிகிரி சான்றிதழ் வழங்கி வந்தோம். வேலை வாய்ப்புகளை மாணவர்கள் தேடினர். தேசிய கல்வி கொள்கையின்படி, இனி வேலை வாய்ப்புக்கு ஏற்ப திறன் மிகுந்த மாணவர்களை உருவாக்க வேண்டும்.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த இணைப்பு கல்லூரிகளுக்கான தேசிய கல்வி கொள்கை பயிற்சி முகாமை துணைவேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார். அருகில் பதிவாளர் தரணிக்கரசு, பதிவாளர் ரஜனீஷ் புட்டானி, டீன் சந்திரசேகர், உயர் பயிற்சி நிறுவன இயக்குனர் பாஞ்ராமலிங்கம்.

இந்த இலக்கை நோக்கி கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள் பயணிக்க வேண்டும். இதில் கற்றலுக்கான தேவையை ஏற்படுத்துதல், மாணவர்களை சவால்களை எதிர்கொள்ள தயார் படுத்தல், தேவைக்கேற்ப மாணவர்களை முழுமையாக மாற்றல் என மூன்று முக்கிய அம்சங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அறிவியல், தமிழ், சோசியாலஜி, மொழியியல் என, எந்த படிப்புகளை படித்திருந்தாலும், நேரடியாக மத்திய தேர்வாணைய தேர்வுகளை எழுத மாணவர்களை தயார் செய்ய, பாடத்திட்டங்கள் வடிமைக்கப்பட்டுள்ளன.

தேசிய கல்வி கொள்கையின்படி மாணவர்கள் எந்த நேரத்திலும் படிப்பினை விட்டு செல்ல முடியும்; எந்த நேரத்திலும் படிப்பினை தொடர முடியும். குறிப்பாக தோல்வி என்பது இல்லை. ஆண்டிற்கு மாணவர்களுக்கு 40 கிரெடிட் கிடைக்கும். வேலைவாய்ப்புக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்க முடியவில்லை எனில், அது, ஆசிரியர்கள் கல்வி நிறுவனங்களையே சேரும்.

இவ்வாறு துணைவேந்தர் பேசினார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு, பதிவாளர் ரஜனீஷ் புட்டானி, டீன் சந்திரசேகர ராவ் உள்பட பலர் பங்கேற்றனர்.

DINAMALAR

14 AUG 2023

PAGE 4

# பல்கலை., பி.ஜி., படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, ஆக. 14–**
பல்கலைக்கழக பி.ஜி., டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வரும் 18ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பி.ஜி., டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்பில் சேர விண்ணப்பங்கள் ஆன்லைனில் வரவேற்கப்பட்டன. ஆன்லைனில் பதிவு செய்த மாணவர்கள் அதனை முழுமையாக சமர்பிக்காமல் உள்ளனர்.

இதனையடுத்து பல்கலைக் கழக பி.ஜி., டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க 10ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டு இருந்தது. இந்தியா முழுதும் மாணவர்கள் விண்ணப்பிக்கும் வகையில் மேலும் காலக்கெடு வரும் 18ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கியூட் – பி.ஜி.,தேர்வு எழுதிய மாணவர்கள் https://www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் விண்ணப்பம், இதர தகுதி விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இத்தகவலை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் தெரிவித்துள்ளார்.